[1978 மார்ச் 18

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, தேசியத் தலைவர் என்ற முறையில் நாடு முழுவதும் பாராட்டு கின்ற தலைவர்களின் பிறந்த நாளை அரசு கொண்டாடிக் கொண்டு இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படிப்பட்ட பல் வேறு சிறப்புமிக்க தலைவர்கள் இருந்திருக்கிருர்கள். அப்படிப் பட்ட எல்லாத் தலைவர்களின் பிறந்த நாளையும் அரசு கொண் டாடுவது என்று ஆரம்பித்தால் அதற்கு நாள் போதாது. என் ருலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆலோசனையின்படி இப்படிப்பட்ட தலைவர்களின் பிறந்த நாளை நாட்டுக்கு உழைத்த தலைவர்கள் விழாவாக அந்தந்த மாவட்டத்தில் கொண்டாட இயலுமா என்பது பற்றி இந்த அரசு பரிசீலிக்கும்.

[முற்பகல் 9-10].

திரு. ப. சுந்திரன்: தலைவரவர்களே, தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளை ஒரு நாள் மட்டும் விழாவாகக் கொண் டாடுவதாக அமைச்சர் அவர்கள் கூறினர்கள். அவர் பிறந்த நாளை ஒரு வாரம் முழுவதும் பகுத்தறிவு வாரமாகக் கொண்டாடும் எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, நான் முன்னலே சொன்னதைப்போல் விழாக்களைக் கொண்டாட ஆரம்பித்தால் ஆண்டு முழுவதும் கொண்டாடிக் கொண்டு இருக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. அவ்வளவு மிகச் சிறந்த, தலைவர்களை இந்த மாநிலம் பெற்று இருக்கிறது. என்ருலும் நான் பெரியார் அவர்களுடைய பிறந்த நாள் விழா கொண்டாடப் படும் என்று தெரிவித்தேன். எத்தனை நாள் என்று குறிப்பிட வில்லை. என்ருலும் ஆண்டுதோறும் ஒரு நாள் கொண்டாடு கிருேம். ஆனல் இந்த ஆண்டு வருகிற பெரியார் அவர்களின் பிறந்த நாள் விழா 100-வது பிறந்த நாள் விழாவாக வருவதால், தமிழகத்தைத் தட்டி எழுப்பிய அந்தத் தன்மான இயக்கத் தலை வனுக்கு இந்த அரசு மிகச் சிறந்த முறையில் 100-வது பிறந்த நாள் விழா இதுவரை தமிழகம் கண்டிராத அளவிற்கு, என் றென்றும் நினைவில் நிற்கிற அளவிற்கு கொண்டாட காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சியில் கல்லூரிக் குழு.

*வினு— 607. திரு. துரை முத்துசாமி,

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் ஒரு கலைக் கல்லூரி அமைக்க கமிட்டி ஏற்படுத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1978 மார்ச் 18]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) மற்றும் (ஆ) கமிட்டி அமைக்க முடிவு செய்யப்பட்டது ஆனால் அது செயல்படவில்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, கள்ளக்குறிச்சி தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு முக்கியமான வியாபார ஸ்தலம். கல்ராயன் பகுதியில் வசிக்கும் மக்களும் அங்கே வருகிறார்கள். அங்கே தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி மிகவும் முக்கியமான பகுதியாக இருப்பதால், அந்தக் கமிட்டி எடுத்த முயற்சி நிறுத்தப்பட்டு இருந்தாலும், இனிமேலாவது அங்கே கல்லூரி துவங்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அந்த மாவட்டத்திலே இருப்பவர்கள் அதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

பள்ளி வளர்ச்சி நிதி.

*வினா 608. திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வளர்ச்சி நிதியென பல்வேறு தனியார் கல்வி நிறுவனங்களில் பணம் வசூலிக்கப்படுகிறதா?

(ஆ) சென்னை நகரில், எல்லாப் பள்ளிகளிலும் கடந்த மூன்று வருடங்களாக T.V. வாங்க வேண்டும் என்பதற்காக மாணவர்களிடம் பணம் வசூலிப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) சென்னை, வண்ணாரப்பேட்டை P.A.K. பழனிச்சாமி உயர்நிலைப் பள்ளியில் T.V. வாங்கப் பணம் கொடுக்காத மாணவர்களுக்கு T.C. கொடுக்கப்பட்டது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) பள்ளி வளர்ச்சிக்கென தனிக் கட்டணம் வசூலிக்க அரசு ஆணையேதும் பிறப்பிக்கவில்லை. ஆனால் ஒவ்வொரு மாணவனிடமிருந்தும் ஆண்டிற்கு ரூ. 5 வீதம் வசதிக் கட்டணம் (Amenity fees) வசூலிக்க அரசு உத்தரவு உள்ளது.

(ஆ) தொலைக்காட்சி சாதனம் வாங்கி நிறுவிடவும் மற்றும் அதைப் பராமரிக்கவும் ஆண்டொன்றுக்கு ரூ. 2 வீதம் மாணவர்களிடமிருந்து வசூலிக்க அரசு அனுமதி அளித்துள்ளது.

(இ) இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS